# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2113/53 - 2019 මාර්තු මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.03.07

*2113/53 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 725, களுத்துறை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இல. மு. பி. க. 4708 எனும் வரைபடத்தில் கீழ்க் காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர் : லன்சியா வத்த அல்லது டபிள்யூ. செமடரி வரிப்பணம் இல. 48, 48A, 48B, 48/1, 48/2, 48/3, 48/4, 48/5, 48/6, 48/1/1/A, 48/1/2, 48/1/3, 48/1/4, 48/1/5, 48/1/6, 48/1/7, காலி வீதி; விபரம் : வீட்டுத் தோட்டம், நிலையான கட்டிட மொன்றின் பகுதி உண்டு; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமையாளர் : இல. 132, தகம் மாவத்தை, கலதேமுல்ல, மொரட்டுவையில் அமைந்துள்ள தொரடுவ தனியார் நிறுவனம்; விஸ்தீரணம் : 0.0242 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 02**

காணியின் பெயர் : லன்சியா வத்த அல்லது டபிள்யூ. செமடரி வரிப்பணம் இலக்கம் தெரியாது, காலி வீதி; விபரம் : வீட்டுத் தோட்டம், தற்காலிகக் கட்டிடம் இரண்டு உண்டு; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : இல. 132, தகம் மாவத்தை, கலதேமுல்ல, மொரட்டுவையில் அமைந்துள்ள தொரடுவ தனியார் நிறுவனம்; விஸ்தீரணம் : 0.0098 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு, களுத்துறை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

காணிக்கான தமது உரிமையை உறுதிப்படுத்துவதற்காக உரிய உறுதி, வரைபடம் மற்றும் ஏனைய ஆவணங்களை பரிசீலனை செய்யும் தினத்தன்று முன்வைக்கவும்.

எஸ். கே. ஹேனாதீர,
பிரதேச செயலாளர்,
களுத்துறை.

பிரதேச செயலகம்,
களுத்துறை,
2019, பெப்புருவரி 16.

3 - 1037

1A - G 29606 - 17 (2019/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.